# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● நவம்பர் 02, 2024

Weekly E-paper ● November 02, 2024




## திராவிடமும் தமிழ்த்தேசியமும்

சுப. வீரபாண்டியன்

### அய்யா ஆனைமுத்து நினைவைப் போற்றுவோம்!

தலையங்கம்

### திராவிடக் கருத்தியலின் தேவை..!

உதயநிதி ஸ்டாலின்

### திராவிடம் யாருக்கு வேம்பு ?

த.மு.யாழ்திலீபன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ●நவம்பர் 02, 2024 Weekly E-paper ● November 02, 2024


# திராவிடமும் தமிழ்த்தேசியமும்

**சுப. வீரபாண்டியன்**

**“தெற்கிலும் வடக்கிலும் பல இடங்களில் போராடி தமிழ்நாட்டின் எல்லையைக் காத்த மாவீரர்களின் தியாகத்தைக் காத்த மாவீரர்களின் தியாகத்தைப் போற்றும் நாள், நவம்பர் 1!**

**தமிழர் வாழும், தமிழ் பேசப்படும் பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைப்பதற்குப் போராடிய அனைவரையும் எல்லைப் போராட்டத் தியாகிகள் நாளில் போற்றி வணங்குகிறேன்!”**

என்று தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளார். எனவே நவம்பர் 1ஆம் நாளுக்கு உரிய மதிப்பை யாரும் புறந்தள்ளி விடவில்லை. ஆனாலும், இதனைத் தமிழ்நாடு நாள் என்று கொண்டாடாத திராவிடம் என்று சொல்லித் தமிழ் தேசியர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்ளும் சிலர், நேற்று கடுமையாகப் பேசி உள்ளனர்.

இந்தத் தருணத்தில் மட்டுமல்லாது, இந்தத் திராவிடமே தமிழுக்கு எதிரி என்பதாகத் தொடர்ந்து அவர்கள் பேசி வருகின்றனர். ஆரியமே தமிழுக்கு எதிரி என்பதை மறைப்பதற்கு அவர்கள் அரும்பாடு படுகின்றனர்.

திராவிடம் என்னும் சொல் சங்க இலக்கியத்தில் இருக்கிறதா? ஆங்கிலேயர் கொடுத்த பெயர்தானே என்று திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். தங்களைத் தமிழ் இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளும் அவர்கள், இந்து என்னும் சொல் மட்டும் சங்க இலக்கியத்தில் இருக்கிறதா என்பது பற்றிப் பேசுவதில்லை. இந்து என்கிற சொல் ஆங்கிலேயர்கள் நமக்குக் கொடுத்த பெயர் என்று அவர்களின் குருநாதர் சங்கராச்சாரியாரே தெய்வத்தின் குரல் நூலில் பதிவு செய்து இருக்கிறார். அது பற்றியும் அவர்கள் பேசுவதில்லை.

ஈ.வெ.ரா. தான், திராவிடம் என்னும் சொல்லை அறிமுகப்படுத்தி, தமிழர்களின் பெருமையை மறைத்து விட்டார் என்று கூசாமல் பொய் பேசுகின்றனர். 1944ஆம் ஆண்டுதான் திராவிட கழகம் பிறந்தது. ஆனால் 1890களிலேயே, தங்கள் அமைப்பிற்கு திராவிடம் என்னும் சொல்லைச் சேர்த்து வைத்த அயோத்திதாசப் பண்டிதர் அவர்களைப் பற்றியோ, ரெட்டை மலை யார் பற்றியோ இவர்கள் பேசுவதில்லை!

பண்டிதர், தான் தொடங்கிய இதழுக்குத் தமிழன் என்றுதான் பெயர் வைத்தாரே தவிர, திராவிடன் என்று வைக்கவில்லை என்கிறார்கள். சரிதான். ஆனால் தமிழன் ஏட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில், திராவிடர் என்னும் சொல்லையே பண்டிதர் பயன்படுத்தியிருக்கிறார். 1910ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது (1911), தங்களின் பெயர்களை எல்லோரும் சாதி மதமற்ற திராவிடர்கள் எனப் பதிவு செய்து கொள்ளுங்கள் என்றும் பண்டிதர் எழுதுகின்றார்.

அவர்கள் தமிழர் என்று ஏற்றுக்கொள்ளும் நடேசனார் 1912 ஆம் ஆண்டே, திராவிடர் சங்கத்தையும், திராவிடர் மாணவர் விடுதியையும் தொடங்கினார் என்பது வரலாறு !

1944 இல் தொடங்கப்பட்ட திராவிடர் கழகம், காலையில் தமிழர் கழகம் என்று பெயர் சூட்டப்பட்டு, மாலையில் பெயர் மாற்றப்பட்டது என்று எந்தச் சான்றும் இல்லாத ஒரு பொய்யைத் தொடர்ந்து கூறி வருகின்றனர். அந்த மாநாடு மாலையில்தான் தொடங்கிற்று என்பதையும், காலையில் பேரணி மட்டும்தான் நடந்தது என்பதையும் அவர்கள் அறிவார்களா என்று தெரியவில்லை.

திராவிடம் தமிழுக்கு எதிரானது என்றால், மறைமலை அடிகளார் பெரியாரோடு கைகோத்து இருப்பாரா? தன் நாட்குறிப்பில், தன் இறுதி நாள்களில் கூட பெரியாரைப் பாராட்டி எழுதி இருப்பாரா? திராவிட மொழி நூல் ஞாயிறு என்னும் பட்டத்தைப் பாவாணர் 1957 இல் ஏற்றிருப்பாரா? திருவள்ளுவர், மறைமலை அடிகள், பெரியார் என்று தமிழர்களின் தலைவர்களைப் பாவாணர் வரிசைப்படுத்தி இருப்பாரா? பாவலரேறு பெருஞ்சித்திரனார் பெரியாரைப் பாராட்டி அப்படி ஒரு கவிதை எழுதி இருப்பாரா ?

எனவே நவம்பர் ஒன்றில் மட்டுமல்லாமல், ஒவ்வொரு நாளும் திராவிடத்தைத் தாக்குவதே தங்கள் பணி என்று கருதிச் செயல்பட்டுக் கொண்டிருப்பவர்கள், சனாதனத்தின் கைக்கூலிகளே என்பது வெளிப்படையாகத் தெரிகிறது!

●

# திராவிடக் கருத்தியலின் தேவை..!

● உதயநிதி ஸ்டாலின்

கடந்த 26.10.2024 அன்று நடைபெற்ற திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கத்தின் தொடக்க விழாவில் மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் சில பகுதிகள்.



## ஆளுநருக்கு பதிலாக ஆரியனர்!

மாநிலங்களுக்கு ஆளுநர்கள் வருவார்கள் என்று பார்த்தோம். ஆனால், ஆளுநருக்கு பதிலாக ஆரியனர்கள்தான் வந்து கொண்டு இருக்கிறார்கள். ஆளுநர் வேலையைப் பார்ப்பதற்குப் பதிலாக, கல்வி வளாகங்களில் சங்கிகளை உருவாக்குகின்ற வேலையைத்தான் செய்து கொண்டு இருக்கிறார்கள். இங்கு ஒரு ஆரியனர் இருக்கிறார். நான் யாரைச் சொல்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும். உயர்கல்வித்துறை அமைச்சருக்கு நன்றாகவே தெரியும்.

திராவிட இயக்கம், பல ஆண்டுகள் பாடுபட்டு, தமிழ்நாட்டில் நிறைய பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளைக் கட்டி வைத்தால், அங்கு எல்லாம் சென்று விழா என்கிற பெயரில் சங்கிக் கருத்துகளைத் தொடர்ந்து பரப்பி கொண்டு வருகிறார். அவருக்கு தமிழ்நாடு என்ற வார்த்தை பிடிக்காது. அவருக்கு தமிழ்த்தாய் வாழ்த்தும் பிடிக்காது. திராவிடம் என்கிற வார்த்தையும் பிடிக்காது. அவருக்குப் பிடித்தது எல்லாம் ஒன்றே ஒன்றுதான். ஒரேயொரு வார்த்தைதான் அது என்ன வார்த்தை என்றால், மன்னித்துக் கொள்ளுங்கள்.

இவை எல்லாவற்றையும் அண்ணாவையும், திராவிடத்தையும் கட்சியின் பெயரில் வைத்திருக்கின்ற அடிமைகள் என்றைக்காவது கண்டித்து இருக்கிறார்களா? இல்லை, கண்டு கொள்கிறார்களா? கண்டு கொள்ள மாட்டார்கள்.ஏனென்றால், அவர்களுக்கு எதுவுமே தெரியாது.திராவிடத்திற்கு அர்த்தமே என்ன என்று சொல்லத்தெரியாதவர்தான் அந்தக் கட்சியின் தலைவர். ஆனால், இவை எல்லாவற்றையும் நாம் கவனித்துக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டு மக்களும் தொடர்ந்து கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

## சங்கத்தின் தேவை!

இந்த மாதிரியான நேரத்தில் இந்த சங்கத்தின் தேவை என்பது மிக மிக முக்கியமானது. எனவே இந்த பணியை முன்னெடுத்த பேராசிரியர் அண்ணன் சுப.வீ அவர்களுக்கும், அக்கா அருள்மொழி அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் சகோதரர் எழிலன் அவர்களுக்கும், இந்த சங்கத்தை ஒருங்கிணைத்த மாரப்பன் உள்ளிட்ட அனைவருக்கும் என் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முக்கியமாக அண்ணன் சுப.வீ அவர்கள், அக்கா அருள்மொழி அவர்களெல்லாம் இன்றைக்கு திராவிட இயக்கத்தின் பேராசிரியர்களாக இருந்து, நம் திராவிட இயக்கக் கொள்கைகளைப் பட்டிதொட்டி எங்கும் கொண்டுபோய் சேர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். நம் கொள்கையை, வரலாற்றை எல்லோரிடமும் சேர்க்கவேண்டும் என்று தி.மு.க இளைஞர் அணியின் சார்பாக, கலைஞரின் மூத்தப்பிள்ளை என்று அவர் எப்போதும் செல்கின்ற 'முரசொலி'யில் 'பாசறைப் பக்கம்' என்ற ஒரு பக்கத்தை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்தோம்.

அதில் அண்ணன் சுப.வீ அவர்கள் 'எழுதி வளர்ந்த இயக்கம்' என்ற ஒரு தொடரை தொடர்ந்து எழுதினார். அதேமாதிரி அக்கா அருள்மொழி அவர்கள் திராவிட இயக்க பெண் போராளிகளை பற்றி தொடர்ந்து எழுதினார்கள். நம் மருத்துவர் எழிலன் அவர்கள் 'டாக்டர் கலைஞர்' என்ற தலைப்பில், மருத்துவத் துறைக்கு நம் முத்தமிழறிஞர் கலைஞர் ஆற்றிய பணிகளைப் பற்றி ஒரு தொடராக எழுதியுள்ளார். அவர்களின் கொள்கைப் பணி போற்று தலுக்கு உரியது. இதுவரைக்கும் இரண்டு வருடங்களில் அவர்களுக்கு நன்றி சொன்னதில்லை. அந்தப் பணிகளுக்காக இந்த மேடையை அவர்கள் மூன்று பேருக்கும் நன்றி சொல்வதற்காக பயன்படுத்திக் கொள்கிறேன்.

## திராவிட இயக்கம்!

1920-களில் தமிழ்நாட்டில் சமஸ்கிருதப் பேராசிரியர்களுக்கு அதிக சம்பளம் வழங்கப்பட்டது. எவ்வளவு தெரியுமா மாதம் 300 ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால், தமிழ்ப் பேராசிரியர்களுக்கு எவ்வளவு தெரியுமா சம்பளம். மாதம் வெறும் 75 ரூபாய் சம்பளமாக வழங்கப்பட்டது. அதை எதிர்த்துப் போராடி, தமிழ்ப் பேராசிரியர்களின் சம்பளத்தை உயர்த்திய இயக்கம்தான் திராவிட இயக்கம்.

அந்தக் காலத்தில் மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டும் என்றால் அந்த மாணவர்களுக்கு சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்பது ஒரு அடிப்படை தகுதி. அப்போதுதான் மருத்துவக் கல்லூரி விண்ணப்பங்களே கொடுக்கப்படும். அதை எதிர்த்து போராடி ஒழித்ததும் நம் திராவிட இயக்கம்தான். அதனால்தான் இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட, பட்டியல் இன மாணவர்கள் எல்லாம் மருத்துவருக்குப் படிக்கிறார்கள்.

ஆனால், இன்றைக்கு எத்தனை மருத்துவர்களுக்கு இந்த வரலாறு தெரியும். இந்த வரலாறு எல்லாம் பல மருத்துவர்களுக்கு தெரியவே தெரியாது. அந்தக் காலத்தில் இருந்த சங்கிகள் மட்டும், நம் கல்வி வளர்ச்சியைத் தடுக்கவில்லை. இப்போது இருக்கின்ற சங்கிகளும் அதே வேலையைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நீட் க்யூட் என்று பல பெயரில் நம் கல்வியைத் தடுக்கலாம் என்று பார்க்கிறார்கள்.

## குடும்பத் தொழில்!

நாம் கஷ்டப்பட்டு மாணவர்களை உயர் கல்விக்குக் கொண்டு வர முயற்சி செய்கிறோம். ஆனால், சங்கிகள் எப்படியாவது மாணவர்களை உயர்கல்வியிலிருந்து விரட்டி அடிக்க, பல திட்டங்களைக் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுதுகூட ஒன்றிய அரசு 'விஸ்வகர்மா திட்டம்' என்று கொண்டு வந்து இருக்கிறார்கள். நம் மாணவர்களை அவர்களின் குடும்பத் தொழிலைச் செய்ய வைத்து, அவர்களின் படிப்பை கெடுக்கின்ற திட்டம்தானே அது.

திராவிடம் என்ன சொல்கிறது, வங்கிக் கடன் வாங்கியாவது உயர்கல்வி படி என்று சொல்வதுதான் திராவிடம். ஆனால் நீ குலத்தொழில் செய், நான்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## அய்யா ஆனைமுத்து நினைவைப் போற்றுவோம்!

தந்தை பெரியாரின் எழுத்துகளையும், பேச்சுகளையும் முதன்முதலாகத் தொகுத்து 1974ஆம் ஆண்டு வெளியிட்டவர் பெரியாரியல் அறிஞர் வே. ஆனைமுத்து. இன்று வரையிலும் பெரியாரின் கருத்துகளை அறிய விரும்புபவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் பேருதவியாய் இருக்கும் பெருந்தொகுப்பு ஆனைமுத்து தொகுத்த 'பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்'.

1925ஆம் ஆண்டு பிறந்த ஆனைமுத்து, பெரியாரோடு நீண்ட காலம் இணைந்து பணியாற்றியவர். பெரியார் முன்னெடுத்த அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தில் பங்கேற்று, 18 மாதம் சிறைத்தண்டனை ஏற்றவர். பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளையும், நாத்திகக் கருத்துகளையும் பரப்புவதற்காக அவர் தொடங்கிய 'திருச்சி சிந்தனையாளர் கழகம்' பெரியாராலேயே தொடங்கி வைக்கப்பட்டது. 2021ஆம் ஆண்டு மறைந்த ஆனைமுத்து, அவர் வாழ்ந்த காலத்தில் முன்வைத்த கோரிக்கைகள் பல.

அறிஞர் அண்ணா முதல்வராக இருந்தபோது, சுயமரியாதைத் திருமணம் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு அத்திருமணத்தை முன்னெடுக்க என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட்டன என்பது ஆனைமுத்து முன்வைக்கும் கேள்வி. (சிந்தனையாளன், செப்.2010).

மொழிச் சமத்துவத்திற்கு எதிரான அரசியலமைப்பின் பிரிவுகள் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார் ஆனைமுத்து. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநிலத்தின் ஆட்சிமொழியே அந்தந்த மாநில எல்லைக்குள் இருக்கிற நடுவண் அரசு அலுவலகங்களில் அலுவல் மொழியாக இருக்க வேண்டும் (சிந். 01.07.2012). ஆனால் நடுவண் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பிற மொழியினரும் இந்தியைக் கற்றுக் கொள்ள நிர்பந்திக்கும் நிலையே இன்றளவும் தொடர்கிறது.

மாநிலங்களுக்கான வருவாய்ப் பங்கீடு என்பது அவற்றிடையே பாகுபாடு கற்பிப்பதாக உள்ளது. தில்லியில் ஒவ்வொரு முறையும் மத்திய அரசு அமையும்போதும், கூட்டாட்சி என்பது பற்றிப் பேசப்பட்டாலும், இந்தியா உண்மையான கூட்டாட்சி நாடாக இல்லை. தேசிய இனங்களுக்கான உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகின்ற சூழலில், ஆனைமுத்துவின் கூட்டாட்சி குறித்த சிந்தனைகள் விவாதத்திற்கு உள்ளாக்கப்படுவது அவசியம். "இந்தியா என்பது என்றைக்குத் தேசிய இன வழிப்பட்ட சமஉரிமை உடைய சமதர்மக் குடிஅரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான கூட்டரசாக மாறுகிறதோ, அன்றைக்கே உண்மையான சுதந்திரநாள். அந்த நாள்தான் இந்திய ஒன்றியத்திலுள்ள ஒவ்வொரு மொழித்தேச மக்களின் விடுதலைநாள் (சிந். 01.11.2020) என்பதே ஆனைமுத்துவின் இறுதி முழக்கம். மாநில சுயாட்சி, மொழி உரிமை குறித்த அவரது சிந்தனைகளை அவருடைய நூற்றாண்டில் முன்னெடுத்துச் செல்ல வேண்டியது தமிழக அரசின் கடமை.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## அய்ந்து புத்தகங்கள் வெளியீட்டு விழா




கடந்த 27.10.2024 அன்று சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அன்பகத்தில் கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் அய்ந்து நூல்களின் வெளியீட்டு விழா நடைபெற்றது. மாண்புமிகு மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் புத்தகத்தை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். கடலூர் இள.புகழேந்தி, கவிஞர் நந்தலாலா, வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, திரைப்பட இயக்குநர் தமிழரசன் பச்சமுத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பதிப்பக இயக்குநர் தோழர் பெல்.ராசன் வரவேற்புரையும் பதிப்பாசிரியர் தோழர் இக்லாஸ் உசேன் தொகுப்புரையும் ஆற்றினர். தோழர்கள் எழில்.இளங்கோவன், செம்பை சேவியர், புவியரசு ஆகியோர் ஏற்புரை வழங்கினர். தோழர் செல்வின் சௌந்தரராஜன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் சுப.வீரபாண்டியன் நன்றியுரை வழங்கினார்.

### அய்ந்து புத்தகங்கள்


1. ஒன்றே சொல்! நன்றே சொல்! – விலை ரூ. 120
2. புரட்சியும் விளைவுகளும் – விலை ரூ. 120
3. அப்பா காரைக்குடி இராம.சுப்பையா – விலை ரூ. 80
4. தமிழ் மண்ணில் சேரன்மாதேவி குருகுலம் – விலை ரூ. 250
5. கால்டுவெல் ஐயர் சரிதம் – விலை ரூ. 140

## முன்பக்கத் தொடர்ச்சி...

உனக்கு கடன் தருகிறேன் என்று சொல்வதுதான் ஆரியம். இந்த மாதிரி பிற்போக்குத்தனமான திட்டங்களைக் கொண்டு வந்துவிட்டு அதையெல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லி, மாநில அரசுக்கு தொடர்ந்து நெருக்கடி கொடுத்துக் கொண்டு இருக்கிறது ஒன்றிய அரசு.

இதையெல்லாம் நடைமுறைப்படுத்தாத மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு அதற்கான முறையான நிதியையும் ஒதுக்குவது இல்லை. இதற்கு மத்தியில்தான் நம் திராவிட மாடல் அரசு மாணவர்களுக்கு அடுக்கடுக்கான திட்டங் களைக் கொண்டு வந்து கொண்டிருக்கிறது. ●

## வீரவணக்கம்!



கடந்த 29.10.2024 அன்று இடதுசாரிச் சிந்தனையாளரும் ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஆதரவாளரும் பின்னாட்களில் திராவிட இயக்கக் கருத்துகளைப் பரப்புரை செய்தவருமான கவிஞர் தணிகைச் செல்வன் காலமானார். 2001இல் அவரது நூலை வெளியிட்டுப் பேசிய முத்தமிழறிஞர் கலைஞர், "பாரதியாரின் வேகமும் பாரதிதாசனின் சொல்வளமும் கூடிய பாடல்கள்" என்று அவருடைய கவிதைகளைப் பாராட்டி உள்ளார். அவருக்குப் பேரவை சார்பில் வீரவணக்கம்!


# திராவிடம் யாருக்கு வேம்பு ?

**த.மு.யாழ்திலீபன்**

சட்டப்பேரவையில் தமிழ்நாடு அரசு எழுதிக் கொடுப்பதைப் படிக்க வேண்டிய ஆளுநர் பெரியார், அண்ணா, கலைஞர், திராவிடம் என்ற சொல்லாடலைத் தவிர்த்து விட்டு வாசிப்பதும், திராவிடம் இன்று காலாவதியாகிவிட்டது என்பதும், தமிழ்நாட்டின் பொதிகைத் தொலைக்காட்சியில் இந்தி மாத நிறைவு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலில் இடம் பெறும் “திராவிட நல் திருநாடும்” என்கின்ற வரியைக் கூட ஆளுநர் தவிர்க்கச் சொல்வதும் (அ) ஆளுநருக்காகத் தவிர்க்கப்படுவதும் திராவிடத்தின் மீதான பகைமையைப் பறைசாற்றும் சான்றாகவே உள்ளன.

திராவிடம் என்ற சொல்லை மறைத்து விட்டால், திராவிடத் தத்துவம் ஒழிந்து விடும் என்று நினைக்கிறார் ரவி. தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் ஆளுநரா? ஆரியநரா? என்று குறிப்பிட்டது போல கடைசி ஆரிய ஆதிக்கவாதி இல்லாமல் ஆக்கும் வரை திராவிடம் இந்த மண்ணில் பரவிக் கிடக்கும் என்பதை ரவி போன்றோர் உணர வேண்டும்.

“தேசிய கீதத்தில் வரும் திராவிடம் என்பது தமிழகம், தெலுங்கானா, கர்நாடகா, ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களை உள்ளடக்கியதுதான். ஆனால் தற்போது திராவிடம் என்றால் தமிழ் இனம் என்று கூறக்கூடிய அளவிற்கு சுருக்கப்பட்டுள்ளது” என்று ஆளுநர் கூறி இருப்பது அறியாத பிள்ளைக்கு பேச்சைப் போன்று உள்ளது.



தமிழ் இலக்கியங்களில் பார்ப்பன எதிர்ப்புணர்ச்சி பல இடங்களில் இருப்பதை நினைவூட்ட வேண்டியது அவசியமாகிறது.

“பார்ப்பானைத் தீப்போல கருதி ஒதுக்கி வை” என்கிறது திரிகடுகம்.

“பற்பல நாட்டிலும் பார்ப்பாரில்லையால்...” என்கிறது கபிலரின் அகவல்.

தெலுங்கர்கள், மலையாளிகள் போன்ற மற்ற திராவிட மொழிக்காரர்களைக் காட்டிலும் ஆரிய பார்ப்பன ஆதிக்கத்தைத் எதிர்ப்பதிலும், பார்ப்பனப் பண்பாட்டுத் திணிப்பை, மொழித் திணிப்பை, அதிகாரச் சுரண்டலை, வர்ணஜாதி முறையை அழித்தொழிப்பதிலும் தமிழர்கள் எப்போதும் தயக்கம் காட்டியதில்லை. எனவேதான் திராவிடக் குடும்பத்தின் சகோதர மொழிக்காரர்கள் ஆரியப் பார்ப்பன சமஸ்கிருதப் பண்பாட்டை ஏற்றுக் கொண்டாலும், பார்ப்பன எதிர்ப்பு எனும் நிலைத்த தன்மையோடு தமிழர்கள் கடுமையான பார்ப்பன எதிர்ப்புணர்வுடன் இருப்பதற்குக் காரணம் திராவிட இன உணர்வே ஆகும்.

திராவிடம் தமிழ்நாட்டோடு சுருங்கி விட்டது என்று பாஜக சொல்கிறது. ஒவ்வொரு முறையும் ஒன்றிய அரசு ஆரிய ஆதிக்கத்தை, இந்தித் திணிப்பை மற்ற மாநிலங்களின் மீது திணிக்கும் போது கர்நாடகா, கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் திராவிட நாடு கோரிக்கை எழுவதை ஆளுநர் ரவி மறந்து விட்டார் போலும். இந்திய நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் ஆரிய திமிர்த்தனத்தின் நடு மண்டையில் இடி விழுந்தாற் போல் “You all Aryan tribes came from the out-side; we (dravidians) are the natives of the land ” இந்த மண்ணின் பூர்வ குடிகள் நாங்கள் என்று அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே முழங்கியதை ஆளுநருக்கு நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

திராவிடம் தமிழ்நாட்டோடு நின்றுவிடவில்லை. நீறு பூத்த நெருப்பாய் மக்களின் உரிமையை ஆரியம் அபகரிக்கும் போது, இயல்பாய் எழுகிறது திராவிட நாடு கோரிக்கை என்பதை உணர்ந்தால் ஆளுநர் ரவிக்கும், அவரது கட்சிக்கும் நல்லது.

“தமிழ் என்றாலே பார்ப்பானுக்கு வேம்பு” என்று 1954இல் குத்தூசி குருசாமி அவர்கள் விடுதலையில் எழுதினார். திராவிடத்தைப் (பார்ப்பன எதிர்ப்பை) பேசும் தமிழையும் தமிழரையும் கண்டால், ஏன், காதால் கேட்டால் கூட பார்ப்பனர்களுக்கு வேம்பாகத்தான் உள்ளது என்று இத்துணை ஆண்டுகளுக்குப் பிறகும் நிரூபிக்க வந்தவர்தான் ரவி.

ஆங்கிலம் இல்லாவிட்டால் சமஸ்கிருதம் நிலைநாட்டப்பட்டிருக்கும், அது முடியாவிட்டால் ஹிந்தி! இதுதான் அக்கிரகார சதி திட்டம். ஆனால் இந்தியை விரட்டி ஆங்கிலத்தை அமர்த்தி தமிழர் வாழ்வில் வெளிச்சத்தை நிரந்தரமாய்த் தந்துவிட்டனர் பெரியாரும், அண்ணாவும். திராவிடத்தின் மீது தீரா கோபமாய் வெடிப்பது தமது சுபாவமாய் கொண்டிருக்கிறார்கள் ரவி வகையறாக்கள்.

தமிழ் தொலைக்காட்சியில் எதற்கு இந்தி மாத நிறைவு விழா? விழாவில் தமிழ்நாட்டு மக்களின் தமிழ்த்தாய் வாழ்த்தின் “தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்” என்ற வரியை மட்டும் தவிர்த்துப் பாட வேண்டியதன் அவசியம் என்ன? 50 ஆண்டுகாலம் திராவிடம் பேசுவோர் நாட்டைப் பிரிக்க முயற்சிக்கின்றனர் என்கிறார் ரவி. ஆனால் பிரிவினைக்கு நாம் முயலவில்லை. இந்த நாட்டின் இறையாண்மையை, சகோதரத்துவத்தைக் காக்க, நாம் தான் முன்னணியில் நிற்கிறோம். பிரிவினையை உருவாக்க வேண்டும் என்று எண்ணி, மக்கள் விரோதப் போக்கில் நாள்தோறும் ஈடுபடும் ஆர்.எஸ்.எஸ். பிஜேபியினர் நம்மைப் பிரிவினைவாதிகள் என்பது இந்த ஆண்டின் சிறந்த நகைச்சுவை.

பாஜக ரவிக்களின் நினைவில் நிற்கத்தான் பேரறிஞர் அண்ணா அன்றே எச்சரித்திருக்கிறார். “திராவிட நாடு கோரிக்கைதான் கைவிடப் பட்டது. ஆனால் அதற்கான காரணங்கள் அப்படியே உள்ளன” என்று. திராவிடத்தை, தமிழர்களைப் புறந்தள்ளி ஆரிய, பார்ப்பனச் சிந்தனையைப் புகுத்த நினைக்கும் ஆளுநர் ஆரியநரே. திராவிடம் என்றாலே பார்ப்பனருக்கு வேம்பு என்பது உண்மைதான்.

●

## பேரவைத் தலைவரின் நிகழ்ச்சிகள்

**02.11.24** - மாலை 6 மணி - சென்னை, டவுட்டன், YMCA அரங்கம் - தி.மு.க. சார்பில் கருத்தரங்கம்

**03.11.24** - மாலை 5 மணி - கோவை, காந்திநகர் - தோழமை அமைப்புகளுடன் கலந்துரையாடல்

**07.11.24** - மாதவரம் - திருமண வரவேற்பு

**09.11.24** - மாலை 5 மணி - சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் சார்பில் மாணவர்களுக்குப் பரிசளிப்பு விழா

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian